විදුලි පණිවුඩ : " විශ්‍රාම වැටුප් " කොළඹ
தந்தி : "ஓய்வூதியம் " கொழும்பு
Telegrams : " PENSIONS " Colombo

දුරකථන
தொலைபேசி
Telephones
2320316
2421786
2431305

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
2342078

මගේ අංකය
எனது இல.
My No.
பிஎன் 4042FF

ඔබේ අංකය
உமது இல.
Your No.

# විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
# ஓய்வூதியத் திணைக்களம்
# DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත මහලේකම් කාර්යාලය,
මාලිගාවත්ත,
කොළඹ 10.

மாளிகாவத்தை செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

Maligawatte Secretariat,
Maligawatte,
Colombo 10.

දිනය
திகதி
Date
2005.12.26

**ஓய்வூதிய திணைக்கள சுற்றறிக்கை இல.12/2005**

செயலாளர், வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
மாவட்ட செயலாளர்கள்/பிரதேச செயலாளர்கள்,
உள்ளூராட்சி ஓய்வூதியப் பிரிவு.

**ஓய்வூதிய மீளாய்வு – 2006**

2006 பாதீட்டுப் பிரேரணையின் அடிப்படையில் கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைய ஓய்வூதியம் மீளாய்வு செய்யப்படும்.

01 ஓய்வூதியம் பெறும் சகல ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்படும் படிகள் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்க்கப்பட வேண்டியதுடன் 2004.12.01 திகதி அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்ற, ஓய்வூதியர்களுக்கு தற்பொழுது வழங்கப்படும் சகல படிகளும் நிகழ்கால குறைக்கப் படாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்பட்டு ரூபா 500/-க்கு குறையாமலும் ரூா 1250/- ஐ விஞ்சா மலும் அவ்வொன்றிணைக்கப்பட்ட ஓய்வூதியம் பத்து வீதத்தால்(10%) அதிகரிக்கப்பட்டு 2006 ஜனவரி 01ஆந் திகதிமுதல் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

02. சகல ஓய்வூதியர்களுக்கும் ரூபா 500/- வாழ்க்கைச் செலவுப்படியொன்று 2006.01.01 முதல் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். இப்படி அதிகரிக்கும் ஒவ்வொரு வாழ்க்கைச் சுட்டெண்ணுக்கும் ரூபா 2.50வீதம் 6மாதத்துக்குக்கொருமுறை செம்மையாக்கப்பட வேண்டும்.

03. இச்சம்பள அதிகரிப்பு புண்ணியக் கொடுப்பனவு பெறுபவர்களுக்கு உரித்தற்றது என்பதுடன் சிவில், ஆசிரியர், படையினரின் தங்கிவாழ்வோர், உள்ளூராட்சி மற்றும் விதவைகள், தபுதாரர்கள் அனாதைகள், அங்கவீனர் ஆகிய ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு உரித்தாகும்.

04. கலவை ஓய்வூதியமொன்றைப் பெறும் ஓய்வூதியர்களுக்கு, அதாவது உள்ளூராட்சி மற்றும் அரச ஓய்வூதியம் ஆகிய இரண்டு பகுதிகளினதும் கூட்டுத்தொகையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, அதன் அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிய துடன் ஒரு விவாகத்தின் பிரிந்துசென்ற விதவைகள், அனாதைகள்/அங்கவீனர் ஓய்வூதியங்கள் பிரித்து கொடுப்பனவு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கே.ஏ.திலகரத்ன
ஓய்வூதியப் பணிப்பாளர்.

பிரதிகள்:
1. சகல அமைச்சுச் செயலாளர்கள்,
2. மாகாண சபை பிரதம செயலாளர்கள்
3. திணைக்களத் தலைவர்கள்,
4. உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள்,
5. முப்படைத் தளபதிகள்,